உ

பதிவு எண்—M5720. வெள்ளிக்கிழமையில் - குருகுலத்தார்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

5 AUG 1963

ஆசிரியர் : இளவழகனார்.

5-கலை குருதலம், மாம்பாக்கம்; விசய, ஆடி; 17—7—63 தனி—42

## குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## செல்வரிற் பேதையர்

வாழ்க்கையிற் செல்வம் பெறுதற்கும் எவ்வளவோ முயற்சி வேண்டும். பல பாடு பட்டுப் பொருள் தொகுக்க வேண்டியுள்ளது. அதற்காக உயிரையே விடுவாரையும் உலகத்திற் காண்கிறோம்.

அவ்வளவு பாடுபட்டுப் பொருள் தேடுதல் எதற்காக என்பதை மக்களிற் சிலரே சிந்தித்து அப் பொருளின் பயனைப் பெறுகின்றனர்; பலர் அதன் பயனைப்பெற அறியாமல், தேடிய பொருளையும் இழந்து போகின்றனர்.

பயன் பெறுவதிலும், புகழற்குரிய பயனைப் பெற அறியாதவரும் உள்ளனர். அதிலும், உயர்வகையான பயன் கொள்ள அறியாதவரே மிகப் பலர். அறிஞராவோர் சிந்திப்பதற் குரியதிலை இது.

பொருளைத் தேடுதல் எப்படி முயற்சியான செயலோ, அப்படியே அதனாற் பயன் கொள்ளுதலும் முயற்சியான செயல்! பொருளை மாற்றாமல், அதாவது செலவு செய்யாமல் பயன் கொள்ளுதல் இயலாது.

செலவு நல்வழியில் ஆதல் வேண்டும். உடம்பும் உள்ளமும் பக்குவமாயிருக்கும் வகையிலும், உயிரின் அறிவு விளக்கமாயிருக்கும் வகையிலும், திருவருள் உட்பட உரியவர்பால் நன்றியுடன் ஒழுகும் வகையிலும், மேலும் இத்தகைய அல்லற் பிறவி வாராத வகையிலும் பொருள் செலவாதல் நல்வழியாகும்; பயனுடையதாகும்.

வாழ்க்கை இவ் வகைகளில் நடைபெறுவதைத்தான் ஆசிரியர் அறவாழ்க்கை என்று அறத்துப்பாலில் விளக்கினார். இதன் முதற்படியே 'விருந்தோம்பல்' என்பது.

விருந்தோம்பலால் உடம்பும் உள்ளமும் அறிவும் நலமடையவும், நன்றியுடன் மெய்ம்மையில் ஒழுகவும் வாய்ப்புகளும் ஏதுக்களும் உள்ளன. ஆதலால், விருந்தோம்பலின்வழிப் பொருள் செலவாதல் எல்லா நலங்களும் விளைக்கும். இருந்தும், அதனை அறியாத நிலை எவ்வளவு இரங்கத் தக்கது!

அத்தகைய நிலையை யுடையாரை செல்வரில் வறியர், பேதையர் என்னாமல் வேறென்ன கூறுவது!

உடைமையுள் இன்மை
விருந்தோம்பல் ஓம்பா
மடமை, மடவார்கண் உண்டு

உடைமையுள் இன்மை—செல்வத்துள் வறுமை எனப் படுவதாகிய, விருந்தோம்பல் ஓம்பா மடமை— விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமை, மடவார்கண் உண்டு — பேதையரிடமே இருப்பது.

இன்மையாகிய மடமை என்க; உடைமை, செல்வம் உடைமை; இன்மையை விட உடைமையுள் இன்மை அறியாமை காரணமாக வருதலின், அதனை மடமை என்றார். தகுதி தெரிந்து ஒழுகும் அறிவு வலிமை அற்றவர் போலவே அவர் காணப்படுதலால், அவரை 'மடவார்' என்றே கூறினார்.

பொருளால் உண்டாகும் பயனைப் பெறாதார், பொருளைப் பெற்றும் பெறாதவரேயாதலின், அவரது நிலை வறிய நிலையே என்க. அஃது இங்கே 'உடைமையுள் இன்மை' எனப்பட்டது. பொருள் செலவாக வேண்டிய நெறிகளில், விருந்தோம்புதலே தொடக்கமும் ஏனையெல்லா நலங்கட்கும் ஏதுவுமாதலின் அதற்கு முதன்மை கொடுக்கப் பட்டது.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| இலை | விசய, ஆடி, | தளிர் |
|---|---|---|
| 5 | 17-7-53 வெள்ளி | 42 |


# திருமுறை விழாவில் செய்ய வேண்டுவன

திருக்கழுக்குன்றத்தில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் நடத்திவரும் திருமுறை விழா தனது எட்டாவது ஆண்டில் தென்னாட்டு விழா என்று சொல்லும்படி சிறப்புற நடைபெற்றது. ஏழாண்டு விழாக்களும் முயற்சிகளும், காடு திருத்திக் கழனியாக்கி ஏர் உழுது உரமிட்டுப் பண்படுத்தி வைக்கின்ற நிலைகளைப் போல் அமைய, இவ்வாண்டு விழா அதன் உண்மை வளர்ச்சிக்கு வித்திட்டது போல் அமைந்திருக்கிறது.

இனி இவ் விழா கீழ்க்கண்ட பல்வேறு வளர்ச்சி நிலைகளை அடைந்து நாட்டு மக்களுக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் பயன் செய்யுமாறு செய்ய வேண்டுவது செந்தமிழ்ச் சிவநெறித் தொண்டர்கள், அறிஞர்கள், தலைவர்கள், செல்வர்கள் எல்லோருடையவும் கடமையாகும்.

பல முறையும் இவ்விதழில் விளக்கியபடி திருமுறை விழாவுக்குரிய சிறப்பிடம் திருக்கழுக்குன்றமே என்னும் உண்மையை அனைவரும் அறிந்து உணரும்படி செய்ய வேண்டும்.

திருவையாற்றில் தியாகராயர் கீர்த்தனைகளுக்கு விழா சிறப்பது போலத் திருக்கழுக்குன்றத்தில் திருமுறைகளுக்கு விழா சிறக்கின்ற நிலையை உண்டாக்கித் திருமுறை ஓதும் திருவினர் அனைவரும் (சிறப்பாகத் தேசிகர்களும், ஓதுவாமார்களும்) அங்கே திரண்டு நின்று காலத்துக் கேற்ற முறையில் இசையுலகில் திருமுறைகளுக்கு முதல் மதிப் புண்டாகுமாறு செய்யும்படி செய்விக்க வேண்டும்.

இவ்வாண்டு இயலும் இசையும் மிளிர நடைபெற்ற விழா இனிவரும் ஆண்டுகளில் நாடகத்தோடு முத்தமிழையும் வளர்க்கின்ற முறையில் நடைபெறுமாறு செய்தல் வேண்டும்.

'சரியை' 'கிரியை' 'யோகம்' 'ஞானம்' என்னும் நாற் பாதங்களிலும் பெருவாரியான மக்கள் பழகுகிறமாதிரி விழா மேல் மேல் விரிவாகவும் விளக்கமாகவும் நடைபெற வேண்டும்.

வெறும் ஆரவார விழாவாக நடைபெறாமல் அறிவியலுக்கும் அருளியலுக்கும் ஒத்த முறையில் நடைபெறும் ஒரே ஒரு விழா இதுதான் என்பதை மெய்ப்பித்து விளக்குகின்ற முறையில் நிகழ்ச்சிகளை அமைத்துக் காலத்துக் கேற்றபடி பல்வேறு வகைகளில் பெரிய முறைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும்.

பல்வேறு துறைத் தலைவர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும் எல்லாம் இணைக்குகின்ற முறையில் விழாவில் கண்காட்சி முதலிய அமைப்புகளையும் சேர்த்து நடத்தமுயலவேண்டும்.

அகில இந்திய வானொலியிலும், ஏன், திரைப் படச்செய்திக் கதிர்களிலுங்கூட விழா நிகழ்ச்சிகள் இடம் பெறும்படி செய்தல் வேண்டும்.

இவ்வகைகளி லெல்லாய் விழாவை வளர்த்து நடத்தத் தக்க உணர்ச்சியையும், நம்பிக்கையையும் இந்த எட்டாம் ஆண்டு விழா அளிக்கின்ற முறையில் ஏற்ற தலைவர்களும், சொற்பொழிவாளர்களும், இசைஞர்களும் திருக்கூட்டத்தார் வேண்டுகோட்க்கு எளிவந்து கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள். இவ் விழாவுக்குத் திருவருள் துணை நிரம்ப இருக்கிறதென்பதைத் தொண்டர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். எனவே முயலவேண்டுவதொன்றே கடைமயாக இருக்கிறது. ஆன்றோர் வாழ்த்தும் அருள் துணையும் முயற்சிக் கேற்ற பயனை முழு அளவில் உண்டாக்கும் என்பது ஒருதலை.

வெல்க முயற்சி!
வளங்குக விழா!!

—கு. ரா ஆடலரசு.

# அருள் துறை

## அருள் நாத ஒலி

மத்தனை என் நெஞ்சகனை வஞ்சகனை வன்பிணிகொள்,
பித்தனை வீணுட்போக்கும் பேயேனை நாயேனை,
முத்தனையாய் உன்றன் முளரித்தாட் காளாக்க
எத்தனைநாள் செல்லும் எழுத்தறியும் பெருமானே.

—வள்ளலார்.

வள்ளலாருக்கு இருந்த இந்த ஏக்கம் நமக்கு இருக்கிறதா? நம்மை நாமே எண்ணிப்பார்த்துக்கொள்ளலாம். எண்ணிப் பார்ப்பவரைத்தான் அருள் வாக்கு தன்னில் ஈடுபடுத்தி ஆக்கமான வழியில் அழைத்துச் செல்லுகிறது.

அகநிலை உயர்ந்தால் தான் புற நிலைகளையும் நல்ல முறையில் ஆட்சி செய்ய முடியும் என்பதற்கான திட்டங்களையும் வகுத்துக் கொடுக்கிறார். 'சிறு துரும்பும் பல் குத்த உதவுமே;' 'இக் குப்பையும் எருவுக்காவது பயன் படாதா' என்று நெறி தவறியவர்களையும் கிளறிப்பார்க்கிறார் இறைவன் நோக்கத்தை நிறைவேற்றுகிற கடமை காரணமாகக் கிளறும் கிளரல் நெறி தவறிய எனக்கும் நல்ல வழிகாட்டி, ஊக்கமும் உணர்ச்சியும் அளித்தது என்றால் திருவருளின் பெருமையை என்னென்று புகழ்வது!

பிள்ளையை நன்றாகப் படிக்க வைக்கவேண்டும் என்ற தீவிரம் பெற்றோர்க்கு இருந்தாலும், பிள்ளையும் அதே தீவிரத்தில் முயன்றால் தான் பெற்றோர் எண்ணமும் முயற்சியும் நிறைவேறும் என்கிறார். இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? இதற்கும் வழி காட்டுகிறார் ஆசிரியர். நீரில் விழுந்த பொருளைத் தேடுகின்றவன் நீரைக் கலக்கிக் கொண்டிருந்தால் விழுந்த பொருள் தெரியுமா? நீர் கலங்காமலிருந்தால் தானே தெரியும். நீரைக் கலக்குவது போன்றது நம் முயற்சி என்று கூறி அமைதியற்ற வாழ்க்கையில் அமைதியைப் பெற வேண்டும் என்கிறார். அமைதியிலிருந்து தான் நல் வாழ்க்கையைப் பெற முடியும் என்று கூறுவதால் அமைதியை எட்டுகிற அளவுக்காவது நம் முயற்சி இருக்க வேண்டுமல்லவா?

இறைவன் வந்து தொழிற்படாமல் நம்மிடத்தில் உள்ள ஆணவம் நீங்காது என்பது ஆசிரியரது முடிவான தீர்ப்பு. அவன் வந்து தங்கி, தொழிற்பட்டாலும், தங்குவதற்கேற்ற தகுதியிலாவது நம் உள்ளத்தைச் சுத்தப் படுத்தி வைத்திருக்க வேண்டாமா? சமைத்துப் போடுபவர் போட்டாலும்,செரிப்பதும் இயல்பாக நடந்தாலும், இடையில், உணவை எடுத்து, மென்று, விழுங்குகிற அளவுக்குக் கூட நம் முயற்சி இல்லையென்றால் யார் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்.

கடல் என வெளிவரும் அருள் வாக்கில் மீன் போன்று உலவும் நாம் எவ்வளவு நீரை விழுங்க முடியும்? முடியுமளவு விழுங்கினாலும் அதைச் செரிப்பதற்கும் இறைவன் துணை வேண்டுமல்லவா? ஆகவே சிறு நெறி செல்லாத் திறனளித்த குருநாதரின் துணை கொண்டு, நம் நெஞ்சத்தை இறைவனுக்கே இடமாக வைத்துப் பணியாற்றும் வகையில் முன்னேறு[illegible]வோமாக.

இனி, சென்ற வார வழிபாட்டிலும் எழுந்த அருள் நாத ஒலியில் சேர்வோமாக.

ஒளி வர இருள் நீங்குகிறது. இதனால் இருளைப் போக்குதற்கென்றே ஒளி இருப்பதாகத் தெரிகிறது. இவ்விரண்டும் மாறுபாடானவை. எதிர்மாறான தன்மையில் இருந்தாலும் ஒன்றுக்கொன்று பக்கத்திலேயே இருக்கின்றன. ஒன்றைப் போக்க ஒன்று தேவையாகிறது. பிறப்பு இருந்தால் இறப்புக் தேவை. இன்பம் இருந்தால் பக்கத்திலேயே துன்பமும் காத்துக் கொண்டிருக்கிறது. குணம் மூன்றாக இருக்கிறது. வெற்றிலைப் பாக்கோடு சுண்ணும்பும் தேவைப்படுகிறது. இது போன்று இரட்டையும் முப்படியுமாக இல்லாமல்,ஒன்றுக்கொன்று தேவை என்கிற நிலை இல்லாமல், உலக பண்டங்களுள் எதனுலும் கவரப் படாததாய், விடுதலை நிலையில் இருப்பது ஒலி. தனித்த தன்மையில் இருப்பதுஒலி.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# மொழித் துறை

## * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு. சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

(முன் தொடர்ச்சி)

### அதிகாரம் 1.
### தாய்மை

அஃதாவது, உலகை நோக்கி அருள் பொழிதலாகிய இறைவியின் தாயாம் பண்பு கூறுதல். மக்கள் வடிவுகளிலும் அத் தாய்ப்பண்பு பாவிப் பயனுறுத்தலின், ஆண்டும் அது நினைவு கூரப்படும்.

1. தாய்மையின் மிக்க
தவமில்லை சேய்தரூஉம்
ஆயிற் சிறந்த அருள்.

(உ-ரை) குழந்தையைப் பெற்றுப் புறந்தரூஉந் தாயினிடம் 'அருள்' என்னும் உணர்வு மாட்சி பெற்றது; ஆதலின், தாய்த் தன்மை பெறுவதினுஞ் சிறந்த தவம் வேறில்லை.

(வி-ம்) மகவை ஈன்று வளர்த்தலால் தாயின் உள்ளத்தில் அருளுணர்வு இயல்பாய் மலர்தலின், அருள் மலரும் பொருட்டுச் செய்யும் ஏனைக் கடிய தவப் பயிற்சிகளினுந் தாய்மையுறுதலே சிறந்ததாயிற்று. சேய்–செம்மையான மகவு; அறிவறிந்த நன்மகவென்க.

2. தோன்று திறையின்றித்
தொல்லுலகம்; தோன்று து
தாயின்றித் தானே உயிர்.

(உ-ரை) இறைவனின்றி இப் பழைய உலகம் தோற்றமுறாது; அதுபோல, தாய் இன்றி எவ்வுயிரும் தானே பிறவியுறாது.

(வி-ம்) இச்செய்யுள், எடுத்துக் காட்டுவமை. இன்றியமையாமை புலப்படுத்திற்று. உலகம் தோற்றமும், ஒடுக்கமும் எய்துதல் தொன்று தொட்டு நிகழ்ந்து வருதலின் 'தொல்லுலகம்' என்றார். இவை இரண்டு பாட்டானும் தாயின் இயல்பும் இன்றியமையாமையும் பெறப்பட்டன.

3. இறவாத அன்பின் இறைமை
பெறக்காண்ப
யாவுள தாயிற் பிற.

(உ-ரை) அழியாத அன்பின் மேன்மை யுண்டாகக் காணத் தக்கவை, தாயினும் வேறு எவை உள்ளன?

(வி-ம்) அன்பென்னும் இயல்பின் அழியாமை தேற்றுதற்கு 'இறவாத அன்பு' என்றும், அன்பே தலைமையாகிய மேன்மை தருதலின் 'அன்பின் இறைமை' என்றும் விதந்தார். 'இறவாத இன்ப அன்பு' என்றார். ¶பிறரும். 'தாய்' பொதுப் பெயராதலின் 'யா' வென்னும் அஃறிணையோடு இயைந்தது. தாயினும் பிற இல்லை யென்பது வெளிப்படை. காரணம் வருஞ் செய்யுளிற் காண்க.

4. அளத்தல் எளிதாம் அனைத்
[தும்; அளப்பரிதாம்
ஆழ்ந்து வளரன்னை அன்பு.

(உ-ரை) ஏனை யெல்லாருடைய அன்பையும் அளந்து மதிப்பிடுதல் எளிது; ஆனால், உளம் ஆழ்ந்து வளர்கின்ற அன்னையின் அன்பை அளத்தல் அரிது.

(வி-ம்) அறிவுக் கெட்டாதது என்றபடி. பலருள்ளத்திலும் அன்பு நிகழுமாயினும் அன்னை

¶ காரைக்காலம்மையார்


நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர்த் தெரு,.: சென்னை 1

அன்பு அவற்றினும் ஆழ்ந்து அழியாது தழைப்பதாகும் என்பதற்கு, 'ஆழ்ந்து வளர் அன்னை அன்பு' எனப்பட்டது இவ்விரண்டு பாட்டும் காரிய காரணங்களும், மேல் இரண்டு பாட்டும் காரண காரியங்களுந் தோன்ற நின்றன.

5. தன்வருத்தம் பாராத் தனக்
 [கென வாழா அ*
அன்னை வடிவதுவே அன்பு.

(உ-ரை) தன் மெய்வருத்தம் கருதாத தனக்கென வாழாத தாயின் வடிவுடையதே அன்பு.

(வி-ம்) அன்னை வடிவே அன்பின் உரு என்றபடி. வருத்தம், உழைப்பால் உளதாவது; 'மெய் வருத்தக் கூலி'† என்பதிற் போல.

6. மக்கள் மனைசுற்றம் மற்றுள்
 [ளோர் அன்பெல்லாம்
தக்கதோ தாயன்புக் கீடு.

(உ-ரை) மக்கள், மனைவி, உறவினர், ஏனையோர் அன்பெல்லாம் தாயின் அன்புக்கு ஈடாகத் தக்கதோ?

(வி-ம்) ஆகாது; இதற்குக் காரணம் முன்னைச் செய்யுளில் வந்தது. மற்றுள்ளோர் நண்பர் முதலியோர் இவை நான்கு பாட்டின், முன் இரண்டால் உலகத்தில் தாய் அன்புக்கு உயர்வும், பின் இரண்டால் ஒப்பும் இல்லாமை பெறப்பட்டது.

7. நோவன செய்யற்க தாய்
 சிறிது[ம்] நோமெனின்
ஆவன அன்றே கெடும்.

(உ-ரை) தாய் வருந்துவன செய்யற்க; தாய் சிறிது வருந்துமெனினும் ஆக்கமாய் நிகழக் கூடியன அப்பொழுதே அழியும்.

(வி-ம்) தாய் என்பதை முன்னுங் கூட்டுக. ஏனினும் என்னுஞ் சிறப்பும்மை தொக்கு நின்றது. அன்றே என்றார், அதன் ஆற்றல் தோன்ற 'ஆவன கெடும்' என்றதனால், இருந்தன கெடுதல் தானே பெறப்பட்டது.

8. குற்றம் பொறுத்துக்
 குறைதவிர்க்கும் தாயன்பு
பெற்றான் பெறும்பெரிய
 பேறு.

(உ-ரை) தான் செய்யுங் குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு தனக்குண்டாகுங் குறைகளையும் அவ்வப்போது நீக்க முயலும் தாயின் அன்பைப் பெற்ற ஒருவன், பெரிய பேறுகளைப் பெறுவான்.

(வி-ம்) தாயின் அன்பு வல்லமை அவ்வாறு அவன் பெரிய பேறுகளைப் பெறுதற்குத் துணை செய்யும் என்பது. உயர்வான வாழ்க்கை நிலைகளை அடைவான் என்றற்குப் 'பெரிய பேறு' என்றார். எச்சவும்மை வருவித்துக் கொள்க.

9. இன்னாப் பிறப்பும் இனி
 [தாகும் தாயன்பில்
சின்னாள் சிறிதே பெறின்.

(உ-ரை) தாயின் அன்பில் சில காலம் சிறிதளவே ஒருவன் பெற்றாலும், இத்துன்பப் பிறவியும் அவனுக்கு இனியதாகும்.


(வி-ம்) இத்துன்பப் பிறவியும் என்னும் சுட்டு, பொதுமை கருதிற்று. தாய்க்குச் சில காலமே தொண்டு செய்யும் பேறு பெறினும் என்றற்குச் 'சின்னாள்' என்றும், அவள் அன்பின் அளவிற்கேற்ற தொண்டுகள் செய்தல் எவர்க்கும் இயலாதாகலின் இயன்றன செய்யினென்றற்குச் 'சிறிதே' என்றுங் கூறினார். பெறினும் என்னுஞ் சிறப்பும்மை கொள்க. ஏகாரம் பிரிநிலை. இவை மூன்று பாட்டினும், தாய்க்குப் புரியுந் தொண்டின் விழுப்பம் நுவலப்பட்டது.

10. மக்கள் திருந்துவர் மண்
 [ணுலகும் பொன்னுலகாம்
தக்கதாம் தாய்மை பெறின்.

(உரை) தகுதியுடைய தாயெ தாயாந் தன்மையைப் பெண்டிர் பெற்றுவிட்டால், உலகத்தில் மக்கள் திருந்திய மக்களாவர். அவர் வாழும் மண்ணுலகும் தேவருலகாகும்.

(வி-ம்) மக்கள் என்பது பொதுமையின் நின்றது. இன்பப் பேறுகட்குரிய உலகமாகும் என்றற்குப் 'பொன்னுலகாம்' என்றும், மக்களைப் பெற்றுத் தருதலளவே தாய்மையாகாமையின், 'தக்கதாய்மை பெறின்' என்றும் விதந்தார். (வரும்)

*"தனக்கென வழாப் பிறர்க்குரியாளன்" மணிமேகலை.
†திருவள்ளுவர்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

(3ம்-பக்கம் தொடர்ச்சி)

'சும்மாகிட, வாயை மூடிக் கொண்டு' என்று சொல்லுவதைப் பார்க்கிறோம். சும்மாயிரு என்ற பிறகும் வாயை மூடு என்பானேன்? அடிக்கடி கேட்காதே, சாப்பிடாதே, வளவளஎனப் பேசாதே என்ற பொருளில் சாதாரணமானவர் சொல்லுகின்றனர். உயர்ந்தவர்கள் வாயால் பேசாது சும்மாயிரு என்ற மௌனத்தில் இருக்கவைக்கின்றனர். சும்மா இருந்தாலும் இருப்பார், ஒன்று சொன்னால் குத்துகிறமாதிரி சொல்லுவார் என்றும் கூறுகிறார்கள். இவைகளால் மோனத்திலிருந்து நல்ல ஒலி பிறக்கிறது என்று தெரிகிறது. ஒலிப்பதற்கு எதிர் மறையாக இருப்பது மௌனம். யாத்திரைபோகும் தலத்தின் எல்லையை அடைந்துவிட்டால் வேறுவகையாகப் பேசுவதினின்றும் மௌனமாக இருக்கவேண்டும். பேசும் அவசியம் இருந்தால் நல்ல பேச்சுக்களைப் பேசுவது நல்லது. மௌனமாகஇருந்தால்தான்நல்ல ஒலி எழும். உலகியலில் மௌனமாக இரு, அருளியலில் நன்றாக எழுந்து வா என்ற இரு செயல்களும் தெய்வ இடலைச் சேர்ந்தவை. இதனால் நம்மை உலகியலினின்றும் அருளியலுக்கு மாற்றுஞ் சோதியாக இருப்பது ஒலி எனத் தெரிகிறது.

ஒளி தோன்றினால் ஒலி தோன்றும். குழந்தை பிறந்தால் அழுகிறது. இது ஒளி, தோன்றி, ஒலி தோன்றுதலைக் காட்டுகிறது. அண்ணாமலையும் கழுக்குன்றும் எனச் சேர்த்துப் பாடியிருப்பதும் இவ்வுண்மையைப் புலப்படுத்துகிறது. அண்ணாமலை ஒளிக் கோயில். கழுக்குன்றம் ஒலிக் கோயில். ஒளியில் பெறாத ஒரு நிலையை மணிவாசகர் ஒலி மலையில் பெற்றார்.

செல்வத்திற்கும் செல்வத்தினால் தோன்றும் கல்விக்கும் அதிதேவதைகளாக இருப்பவர்கள் திருமாலும், பிரம்மாவும். எவ்வளவுமேம்பட்ட கல்வியாளரும் அருளை நாட முடியாது என்பது பிரம்மா பிரணவத்தை அறியவில்லை என்பதிலிருந்து தெரிகிறது. பிரம்மா படைக்கிறார். திருமால் காக்கிறார். உருத்திரர் அழிக்கிறார். பிரம்மா விஷ்ணு நிலைகளிலிருந்து மகேசுரர் சதாசிவர் நிலைகளுக்கு உயர்த்துகிறார். பிரம்ம விஷ்ணு நிலை உலகியல் நிலை; மகேசுரர் சதாசிவர் நிலை அருளியல் நிலை. இரு இயல்களுக்கும் நடு ஒளியாக இருந்து வேலை செய்கிறவர் உருத்திரர்.உலகியல் நம்மைக் கீழ்நோக்கித் தள்ளுகிறது. அருளியல் மேல் நோக்கிச் செலுத்துகிறது. உலகியலாருக்கு, பிரம்ம விஷ்ணுக்களுக்கு, ஒளியாக நின்றார். அருளியலில் வாழும் மகேசுரர் சதாசிவர் முதலியவர்களுக்கு ஒலியாக நின்றார். ஒளியையும் ஒலியையும் இணைத்தவர் உருத்திரர். அவருக்கு இருமருங்கும் இருவர் இருவராக இருக்கின்றனர். உலகியலை நம்மிடத்தில் சேர்ப்பது ஒளி. அருளியலில் நம்மைச் சேர்ப்பது ஒலி.

அருளியல் மேல் நோக்கச் செய்வதால் அண்ணாந்து பார்க்கச் செய்கிறது. இதனால் பிரம்ம விஷ்ணுக்களுக்குத் தோன்றிய சோதி அண்ணா என்ற பெயர் பெறுகிறது. பொருள் நிலையில் கீழ் நோக்கிச் சென்றவர் விஷ்ணு. கல்வி நிலையில் மேல் நோக்கிப் பறந்தவர் பிரம்மா. இரண்டுக்கும் மேற்பட்ட ஒளி மலையாக நின்றவர் உருத்திரர். இவர் உலகியலை அழித்து அருளியலில் ஓங்க வைக்கிறார் தாழ்ந்துபோகாது ஓங்கி நிற்கவேண்டும் என்பதற்காக இருவரும் காணமுடியாத நிலையில், ஓங்கி நிற்கிறார்.

நடராசரை வலத்திலிருந்து இடமாகப் பார்க்க ஒலிக்கு அடையாளமான உடுக்கையும், ஒளிக்கு அடையாளமான மழுவும் தெரிகின்றன. கீழிருந்து மேலாகப் பார்க்கக் காலில் சிலம்பும், முடியில் பிறையும் தெரிகின்றன. சிலம்பு ஒலிக்கும். பிறை ஒளி கொடுக்கும். திருமால் வலக் கையில் ஒளியாகிய சக்கரமும், இடக் கையில் ஒலியாகிய சங்கும் இருக்கும். எல்லாவற்றிலும் இவ்வமைப்பு உண்டு. இவற்றை நாம் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இரவு 14 நாழிகைக்குமேல் சுமார் பன்னிரண்டு மணிக்கு, நள்ளிருளில், அமரபட்சத்தில், சோமவார தினத்தன்று, சதுர்த்தசியோடு கூடிய திருவோண நட்சத்திரத்தில் அண்ணாமலையாகிய ஒளிப்பிழம்பு தோன்றியது. (திருவோண நட்சத்திரத்தில் தோன்றியவர்கள் தெய்வீகம் பொருந்தியவர்களாக இருப்பர். இப்படிப் பட்டவர்கள் இதை எண்ணிப் பார்த்துத் தெய்வ நிலைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்). இச் சோதியே இலிங்கவடிவமாக வணங்கப்படுகிறது.

(சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தில் நடைபெற்ற வார வழிபாட்டில் ஆசிரியர் அவர்கள் நிகழ்த்திய விரிவுரையின் சுருக்கம்).

—சோமசுந்தரம்

(வரும்)

# * பெரியபுராணம் *

(சிவக்கவிமணியின் செந்தமிழ்க் கட்டுரை)

[திருக்கழுக்குன்றத் திருமுறைப் பெருவிழாவை ஒட்டித் திருமுறைக் கண்காட்சி ஒன்றை அமைக்க எண்ணிப் பலர்க்குக் கடிதம் எழுதியபோது, கோவை. சிவக்கவிமணி C K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தக்கபடி ஊக்கமூட்டி விடை எழுதிப் பழைய பெரிய புராண அச்சுப்படிகளையும், அதன் ஓலை ஏடு ஒன்றையும் அனுப்பிவைத்தார்கள். பெரிய புராண விளக்கமே தம் வாழ்க்கை நோக்கமாகவும், திருமுறைகளையே தம் வழிகாட்டிகளாகவும் கொண்டுள்ள அவர்கள் அனுப்பியவற்றுள் கீழ் வரும் கட்டுரையும் ஒன்றாகும். வாழ்க சிவக்கவிமணி! வெல்க அன்னார் தொண்டு!]

---

பெரியபுராணம் கி. பி. 12ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டது. இதனை இயற்றியவர் சேக்கிழார் என்று பெருவழக்காய் அறியப்படுகின்ற பெரியார். இவர் அந்நாளில் சோழநாட்டை ஆண்ட குலோத்துங்கர் என்னும் அநபாய மன்னரின் முதலமைச்சராய் விளங்கினர் என்றும், அம் மன்னர் வேண்டியவாறே இந்நூல் இயற்றப்பட்டதென்றும் இதனை அவரது அரச சபை விரும்பி ஏற்றது என்றும் அறியப்படுகின்றது. அநபாயர் அறநெறியிலே வழுவாது நாடு காவல் புரிந்த பேரரசர். புலவர்களிடத்தே அன்பு கொண்ட கலைஞான விநோதர்; சிவனடி மறவாத பேரன்புடன் சிவன்பணி பலவும் செய்தவர் திருநீற்றுச் சோழர் என்று சிறப்புப் பெயர் பூண்டவர். அவரது மனத்தைத் திருக்கயிலாய மலைக்கு ஒப்பாக எடுத்து இந்நூலில் பாராட்டுகிறார் உண்மை நெறிபிறழாத சேக்கிழார். இத்தகைய அரசர் பெருமானும் அவரது அரச சபையும் இந்நூலை விரும்பி ஏற்றுக் கொள்ளப் பேரமைச்சரால் இயற்றப்பட்டது என்றால், இதன் பெருமை அதனாலேயே விளங்குவதாம்.

இந்நூல் ஒரு அரசியல் தத்துவ நூலாகவும், உலகியல் நீதி நூலாகவும், சரித்திர ஆதார நூலாகவும், தமிழ்க்காவிய நூலாகவும், சைவசமயச் சிறப்பு நூலாகவும், ஞானோபதேச நூலாகவும் ஒருங்கே விளங்குகின்றது.

இது புராணம் என்று பெயர் பெற்றாலும் சரித ஆதாரமாகிய அடிநிலையின் மேல் அமைக்கப் பட்டிருக்கிறது "வடபுலத்து வாதாவித் தொன்னகரந் துகளாகத் துணை நெடுங்கை வரையுகைத்து" என்று கூறிய பாட்டின் ஒருவரியே சிறுத்தொண்ட நாயனார், திருஞானசம்பந்த நாயனார் முதலிய பெரியவர்களுடைய கால நிச்சயத்துக்குப் பெருந் துணையாயிருந்தது. இவ்வாறே திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் முதலிய பெரியவர்களது சரித வரலாறுகள் அவர்களது தேவார முதலியவற்றாற் பெறும் அகச் சான்றுகளால் உறுதிப்பட நிற்கும் நேர்மை காணத் தக்கது. திருநாவுக்கரசர்பால் அவஞ் செய்த பல்லவ மன்னவன் குணபரன் என்பவன் அவ்வாலாற்றின் பின் நல்லறிவு பெற்றுச் சைவனாகிக் குணபர வீச்சரம் என்ற கோயிலும் எழுப்பித்தானென்ற புராணப் பகுதி அவ்வரசனது திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டினாலும் பிறவற்றாலும் உறுதிப்படுகின்றது. இவ்வாறு கல்வெட்டு முதலிய சரித ஆராய்ச்சித் துறையாளர்கள் கண்ட முடிவுகள் யாவும் சிறிதும் பிறழாது இப் புராணப் பகுதிகளுடன் பொருந்தக் கண்டு சில ஆராய்ச்சியாளர்கள் சேக்கிழார் தாமும் கல்வெட்டு ஆராய்ச்சிகள் செய்த பின்பே அம் முடிவுகளின் வழியே புராணம் இயற்றினர் என்று கூறவும் துணிந்து விட்டனர்.

அரசாங்கத்தின் இன்றியமையாத கடமைகளைப் பற்றி வரையறை செய்து இந்நூலிற் கூறப்பட்ட செய்திகள் ஒவ்வொரு அரசரும் அல்லது அரசாங்கமும் பின்பற்றத் தக்க கற்பனைகளாகும்.

"மாநிலங்கா வலனாவான்
மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றல்
பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா
னல்லனோ?"

என்ற பாட்டை எல்லா அரசாங்

Telegrams: "RAMBROS"
N.RamuBros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

கங்களும் போற்றினல் நாடு நலம் பெறும்.

நல்ல அரசாட்சியின் கீழ் வாழும் பேறு பெற்ற குடிகளின் பண்பினைக் கீழ்வரும் பாட்டால் இப்புராணம் விளக்குகின்றது.

"அரசுகொள் கடன்க ளாற்றி
மிகுதி கொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக்
குரவரும் விருந்தும் பண்பின்
விர விய கிளையுந் தாங்கி விளங்கிய
குடிக ளோங்கி
வரைபுரை மாட நீடி மலர்க்குள
பதிக ளெங்கும்"

இராச தந்திரங்களின் உயர்ந்த ஒழுக்கத்தின் நிலைகள் அமைச்சர் குலச்சிறையார், அரசியார் மங்கையர்க்கரசியார் வரலாறுகளில் விளக்கம் பெறக்காணவுள்ளன.

அந்நாள் நீதி மன்றங்களில் வழக்கு விசாரணை முறையும் சாட்சியங்களின் வகையும், அவற்றால் வழக்கு நாட்டப்படும் பண்புகளும், துலாக்கோல் போல ஒருபாற்கோடாது நீதி வழங்கப்படும் நேர்மையும், பிறவும், இந்நாளில் உயர்ந்தவையாகக் கருதப்படும் நீதி முறைகளுக்கு ஒரு சிறிதும் பிற்படாது விளங்குதலும், மேம்பட்டு விளங்குதலும், தடுத்தாட் கொண்ட புராணத்துள்ளும், வேறு பல இடங்களிலும் ஆசிரியர் உலகுக்கு எடுத்துக் காட்டி இருக்கும் ஒழுங்குகளும் காணத் தக்கன.

சமூகநிலை, சாதிகளின் நிலை, மண ஒழுங்குகள், உடன் உண்ணு நிலை முதலிய ஒழுக்கங்கள் பற்றியும் பல உண்மைகள் இந்நூலிற் காணப்படுவன. இந்நூலிற் கூறப்படும் நாயன்மார்கள் எல்லாரும் உலகில் ஏனைய மக்களாற் செய்தற்கரிய செயல்களைச் செய்தவர்களே யாவர். அதனால் அவர்கள் பெரியர் எனப் பெற்றவர். ஆகையால் அவர்களது செயல்களுள்ளே உலக மக்களாற் படியெடுத்து ஒழுக இயலாதன பலவும், இயல்வன பலவும் இருக்கின்றன. இக்கருத்தையே திருக்களிற்றுப் படியார் என்ற மெய்கண்ட ஞான சாத்திரத்தினுள் "மெல்வினையே யென்ன வியனுலகு ளோர்க்கரிய, வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் – சொல்லிற், சிவதன்ம மாம்............" என்றும் "நமக்குமெளிதான வற்றை மெல்வினையே யென்றதுநாம் வேறு" என்றும், "கொடுவினையே யானவற்றை, வல்வினையே யென்றதுநா மற்று" என்றும் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. முருக நாயனார் முதலியோரின் ஒழுக்கங்களைப் பற்றிய வரலாறுகள் மெல்வினைகளுக்கும், சிறுத்தொண்ட நாயனார் முதலியோரின் வரலாறுகள் வல்வினை களுக்கும் உதாரணங்களாம். ஏயர்கோன் கலிக்காம நாயனாது மனைவியார், இளையான் குடிமாறாது தேவியார் இவர்களது ஒழுக்க நிலைகள் மனைவாழ்க்கை நிலைக்குச் சிறந்த ஒளி தந்து நிலவுகின்றன.

இந்நூலிற் பேசப்படும் சரிதங்கள் சைவசமயத்தின் உயர்ந்த கொள்கைகளை எடுத்துக் காட்டும் நிலைக்களங்களாகும். சிவனுக்காளாகி உய்தி பெற்று உயரும் தன்மையில் சாதி குலம் செல்வம் ஆண் பெண் வருணம் ஆச்சிரமம் முதலிய வேறுபாடுகள் எவையும் குறுக்கிடுவதில்லை என்பது சைவ சமயத்தின் உயர்ந்த கொள்கைகளுள் ஒன்று. அதனை இந் நூலுட் கூறப்படும் நாயன்மார் சரிதங்களுள் எங்கும் பரக்கக் காணலாம். தில்லை வாழந்தணர்கள் முதலாகப் பாணனாரீறாக எல்லா வகையினரும் வேறுபாடின்றிச் சிவனைச் சேர்ந்தவர்களாய் வணங்கப்படுகிறார்கள். சாதி குலம் செல்வம் முதலியவற்றால் வரும் உலக வேற்றுமைகள் யாவும் இந்நூலினுள் விதந்து காட்டப்பெறுகின்றனவெனினும் சிவன்பாலன்பு நிலையின் முன்னே ஒடுங்கி ஒழிந்து போகின்றன என்பது இதில் தேற்றமாய் அறிவிக்கப் படுகின்றது. உலகில் காணும் பூசல்கள் எல்லாம் ஒழிந்து மக்கள் ஒன்றுபட்டு உய்ந்து நல்வாழ்வில் வாழ வேண்டுமானால் அதற்கு இந்நூல் பெருஞ் சாதனமாம்.

ஞான சாத்திரங்களில் முடிந்த முடிபுகளாக உள்ள உண்மைகளைத் தொகுத்துச் சைவசித்தாந்தம் என்ற பெயரால் மெய்கண்ட நூல்கள் பேசுவன. அவை, இறைவன், உயிர்களின் உய்தி கருதி வகுத்தருளிய வேத சிவாகமங்களின் சாரங்களேயாம். அந்த உண்மைகளை இலக்கிய வகையால் நாயன்மார்களின் வாழ்க்கைச் சரிதங்கள் என்ற உதாரணங்களின் மூலமாகப் பெரியபுராணம் எடுத்துக் காட்டுகின்றது.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாமபாக்கம்; மதுராந்தகம் (அகு)